**குளித்தலை நகராட்சி**

28.06.2019.ஆம் தேதி வெள்ளிக்கிழமை மாலை 4.30 மணியளவில் நகராட்சி மன்ற அலுவலகத்தில் நடைபெற்ற சாதாரணக்கூட்டம்

ஆணையர் மற்றும் தனி அலுவலர்(பொ)
குளித்தலை நகராட்சி.

-------

பொருள்–01. குளித்தலை நகராட்சி பொறியாளர் மற்றும் ஆணையர்(பொ) அவர்களின் மே–2019.ஆம் மாத தினசரி நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும், பதிவுக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு– மன்றம் பதிவு செய்யலாம்.

பொருள்–02. குளித்தலை நகராட்சிப் பகுதியில் தூய்மை இந்தியா திட்டம் திடக்கழிவு மேலாண்மை திட்டம் 2018–2019.ல் நகராட்சி நிர்வாக ஆணையரக நிர்வாக அனுமதி ந.க.எண்.22866/பி3/2018, நாள்–23.08.2018.ல், இரண்டு நுண்உரக்கிடங்கு உட்கட்டமைப்பு பணிகள் ரூ.70.48 லட்சம் மற்றும் ஆரம்ப குப்பைகள் சேகரிப்பு பேட்டரியால் இயங்கும் வாகனங்கள் மூன்று எண்ணிக்கைக்கு ரூ.5.40 லட்சம், பயோமைனிங் முறையில் குப்பைகள் அகற்றுதல் பணிக்கு ரூ.340.00 லட்சம் ஆகியவை அனுமதிக்கப்பட்டுள்ளது. மேற்கண்டுள்ளவற்றில் அண்ணாநகர் பூங்கா மற்றும் ஜெய்மகால் அவென்யூ ஆகிய இரு இடங்களில் நுண்உரக்கிடங்குகள் அமைத்தல் பணியில் அண்ணாநகர் பூங்கா பகுதியிலான பணிக்கு ஆட்சேபணை தெரிவித்து WP(MD) No.463/2019 சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் திரு.பாண்டியன் என்பவர் வழக்கு தொடர்ந்துள்ளார். திட்டப்பணியினை ஆகஸ்ட் 2019.க்குள்ளான காலத்தில் நிறைவேற்ற வேண்டியுள்ளதால், அவசியம் கருதி, அண்ணாநகர் பூங்கா நுண்உரக்கிடங்கு (2TPD) அமைக்கும் பணியை ரத்து செய்யவும், சத்தியமங்கலம் உரக்கிடங்கில் ஏற்கனவே போதுமான கட்டமைப்பு வசதிகள் உள்ளதாலும், மேற்படி பணியை சத்தியமங்கலம் உரக்கிடங்கில் அமைக்க நகராட்சி நிர்வாக ஆணையர் நிர்வாக அனுமதி வேண்டி கருத்துரு அனுப்ப மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– அனுமதி வழங்கலாம்.
(ந.க.எண்.1389/2019/இ1)

பொருள்–03. இந்நகராட்சி ஆணையர், அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் அலுவலக வேலையின் காரணமாக அவ்வப்போது வெளியூர் சென்றுவர 2019–2020.ம் நிதியாண்டுக்கு பயணப்படி பட்டியல் தொகை வழங்க உத்தேச செலவினம் ரூ.6.00 லட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.1252/2019/அ1)

பொருள்–04. குளித்தலை நகராட்சி அலுவலக பயன்பாட்டிற்கு தேவையான 1KVA UPS, 28AH பேட்டரியுடன் 3 எண்ணிக்கைகள் அவசர அவசியம் கருதி தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15.ன்.கீழ் கோல்டன் இன்போ டெக், கே.புதூர், மதுரை நிறுவனம் மூலம் வாங்கியது மற்றும் பட்டியல் தொகை ரூ.1,07,970/–ஐ, பொது நிதியிலிருந்து வழங்கியதன் விபரம் மன்றத்தின் பார்வைக்கும், பதிவுக்கும்.

அலுவலக குறிப்பு– பதிவு செய்யலாம்.
(ந.க.எண்.451/2019/இ1)

பொருள்–05. குளித்தலை நகராட்சி அலுவலக பயன்பாட்டிற்கு தேவையான கணினி உபகரணங்கள், பிரிண்டர்கள், அவசர அவசியம் கருதி தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15.ன்.கீழ் கோல்டன் இன்போ டெக், கே.புதூர், மதுரை நிறுவனம் மூலம் வாங்கியது மற்றும் பட்டியல் தொகை ரூ.2,61,690/–ஐ, பொது நிதியிலிருந்து வழங்கியதன் விபரம் மன்றத்தின் பார்வைக்கும், பதிவுக்கும்.

அலுவலக குறிப்பு– பதிவு செய்யலாம்.
(ந.க.எண்.449/2019/இ1)

..2..

பொருள்– 06. குளித்தலை நகராட்சியில் வழங்கப்படும் கட்டிட உரிமங்களுக்கு உரிமக்கட்டணம் இயந்திரங்கள் நிர்மானிப்பதற்கும், மனைப்பிரிவு செய்வதற்கும் மற்றும் இதர இனங்களுக்கும் திருத்திய உரிமையாணைக் கட்டணம் விபரம் மற்றும் தமிழ்நாடு ஒருங்கிணைந்த அபிவிருத்தி மற்றும் கட்டிட விதிகள் 2019.ன்படி விதி 14.ல் திட்ட அனுமதி அல்லது கட்டிட அனுமதி 5 ஆண்டுகள் காலநீட்டிப்பு விபரங்கள், கரூர் மாவட்ட அரசிதழில் பிரசுரம் செய்ய, கிளை மேலாளர், அரசு கிளை அச்சகம் அவர்களின் கடிதம் ந.க.எண்.திட்டம்.07/142பி/2019, நாள்–08.05.2019.ன்படி பிரசுரக் கட்டணம் செலவினம் ரூ.8400/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவல குறிப்பு– ஆணையர்(பொ) மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று செலவினம் ரூ.8400/– மேற்கொள்ளப்பட்டதை மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.238/2019/பி2)

பொருள்– 07. குளித்தலை நகராட்சி அம்மா உணவகத்தின் ஸ்டீம் ஜெனரேட்டர் பேட்ச் வொர்க், வெல்டிங், புதிய M.S.பிளேட் மற்றும் உபகரணங்கள் மாற்றுதல் பணி அவசர அவசியம் கருதி தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15.ன்கீழ் மேற்கொள்ளப்பட்டது. ஜீவன் ஏஜன்ஸிஸ், 7/92,அக்பர்சாலை, துவாகுடிமலை, திருச்சி நிறுவனத்தாருக்கு பட்டியல் தொகை ரூ.47,672/–ஐ வழங்கியதன் விபரம் மன்றத்தின் பார்வைக்கும் பதிவுக்கும்.

அலுவலக குறிப்பு– பதிவு செய்யலாம்.
(ந.க.எண்.583/2019/இ1)

பொருள்– 08. குளித்தலை நகராட்சி தென்கரை வாய்க்காலில் ஆறு இடங்களில் குடியிருப்புகளில் இருந்து வெளியேறும் கழிவுநீர் கலக்க செய்கிறது. அரசு உத்தரவின்படி மேற்படி கழிவுநீர் வாய்க்காலில் கலக்கும்முன்னர், சுத்திகரிப்பு செய்து வாய்க்காலில் விடுவிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. அதற்குரிய மதிப்பீட்டினை தனியார் தொழில்நுட்ப ஆலோசகர்மூலம் தயாரிக்க ரூ.1,75,000/– உத்தேச செலவினத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு–
1). அனுமதி வழங்கலாம்.
2). செலவினத்தை குடிநீர் நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
3). அவசர அவசியம் கருதி ஆணையர்(பொ) மற்றும் த்னி அலுவலர் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி பெற நடவடிக்கைகள் மேற்கொண்டதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.
(ந.க.எண்.624/2019/இ1)

பொருள்– 09. குளித்தலை நகராட்சிப் பகுதியில் பாராளுமன்ற உறுப்பினர் நிதி 2018–2019.ல் கடம்பர்கோவில் மற்றும் காவேரிநகர் லைப்ரரிசாலையில் இரண்டு உயர்கோபுர மின்விளக்குகள் அமைக்கப்பட்டுள்ளது. அந்தப் பகுதியில் உள்ள கீழ்க்கண்ட இடங்களில்,

| வ.எண். | விபரம் | தெருவிளக்கு விபரம் | எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1) | காவேரிநகர் நூலகம் முன்பு | 3x55W- CFL | 1 |
| 2) | உழவர்சந்தை கலப்புக்காலனி | 3x55W- CFL | 1 |
| 3) | காவேரிநகர் மூகாம்பிகை கேஸ் ஏஜன்ஸிஸ் எதிரில் | 250W- SV | 1 |
| 4) | கடம்பர்கோவில் கரூர்–திருச்சி புறவழிச்சாலை இருபுறமும் | 36W- LED | 2 |
| | | மொத்தம் | 5 |

மேற்குறிப்பிட்ட தெருவிளக்கு / உயர்கோபுர மின்விளக்கு அமைக்கப்பட்டதால், இவ்விடத்தில் தேவையற்றதாக உள்ளது. எனவே, மேற்படி நான்கு இடங்களில் உள்ள ஐந்து மின்விளக்குகளை கழற்றுவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– அனுமதி வழங்கலாம்.
(ந.க.எண்.1277/2019/இ1)

பொருள்– 10. குளித்தலை நகராட்சி நாப்பாளையம் தலைமை நீரேற்று நிலையத்தில் உள்ள குடிநீர் குழாய் நடைபாலத்தின்கீழ் காவேரி ஆற்றில் உள்ளபழுதடைந்த தூண்களை பழுது சரிசெய்யும் பணியினை சுமார் ரூ.7.75 லட்சம் செலவின மதிப்பீட்டில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு–
1). அனுமதி வழங்கலாம்.
2). செலவினத்தை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.
(ந.க.எண்.1450/2019/இ1)

பொருள்– 11. குளித்தலை நகராட்சிக்கு சொந்தமான சத்தியமங்கலம் உரக்கிடங்கில் பணிகளுக்கு இடையூறாக உள்ள ஐந்து (5) மின்கம்பங்களை அகற்ற ரூ.1800/–ஐ, மதிப்பீட்டு கட்டணமாக மின்வாரியத்திற்கு செலுத்த மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– 1). அனுமதி வழங்கலாம்.
2). அவசர அவசியம் கருதி ஆணையர்(பொ) மற்றும் தனி அலுவலர் முன்அனுமதி பெற்று பொது நிதியிலிருந்து செலவினம் மேற்கொண்டதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.
(ந.க.எண்.1311/2019/இ1)

பொருள்– 12. சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.4880/2018/ஜே3, நாள்–11.04.2019.ல், நகராட்சியில் 20 ஆண்டுகளாக மாசற்ற முறையில் பணிபுரிந்த ஓட்டுநர்களுக்கு தங்கப்பதக்கம் வழங்கவேண்டும் எனவும், அதற்கான தொகையை சென்னை எழுது பொருள் துறை இயக்குநர் அல்லது தமிழ்நாடு கைவினை பொருட்கள் மேம்பாட்டுக்கழகம் அலுவலகத்தில் செலுத்தி பெற்றுக்கொள்ளுமாறு உத்தரவிடப்பட்டுள்ளது. மேற்படி உத்தரவில் குளித்தலை நகராட்சியில் பணிபுரியும் திரு.ரா.தர்மலிங்கம், ஓட்டுநர் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

மேற்படி ஒரு ஓட்டுநருக்கு தங்கப்பதக்கம் வழங்க ஆகும் உத்தேச செலவு ரூ.17,100/– செலுத்தவும், கோல்டுமெடல் 4-Gram கொள்முதல் செய்யும்போது அன்றைய சந்தை நிலவரப்படி கூடுதல் தொகையை செலுத்தவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– 1). மன்றம் அனுமதிக்கலாம்.
2). மேற்படி பணிக்காகும் செலவினத் தொகையினை நகராட்சி பொது நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.4635/2018/சி1)

பொருள்– 13. இந்நகராட்சி 2019–2020.ஆம் ஆண்டுக்கு இந்நகராட்சிக்கு தேவையான படிவங்கள், பதிவேடுகள், கணனி பிரிவிற்கு தேவையான பேப்பர்கள் மற்றும் எழுதுபொருட்கள் ஆகியவற்றினை அவ்வப்போது தேவைக்கேற்ப, அரசு சார்பு நிறுவனமான தமிழ்நாடு மல்டிபர்பஸ் இன்ட்கோசர்வ், 107–முதல்தளம், என்.எஸ்.காம்ப்ளக்ஸ், 25ஏ,சுந்தரதாஸ்குளத்தெரு, திருச்சிராப்பள்ளியில் வாங்கி பயன்படுத்திக்கொள்ளவும், அதற்கான உத்தேச செலவினம் ரூ.5,00,000/–த்திற்கும் (ரூபாய் ஐந்து லட்சம் மட்டும்) மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு– 1). மன்றம் அனுமதிக்கலாம்.
2). எழுதுபொருட்களின் அவசர அத்யாவசிய தேவை முன்னிட்டு, மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி பணி உத்தரவு வழங்கியமைக்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.
(ந.க.எண்.1171/2019/பி2)

பொருள்– 14. குளித்தலை நகராட்சி பெரியார்நகர் தலைமை நீரேற்று நிலையத்தில் உள்ள குடிநீர் குழாய் நடைபாலத்தின்கீழ் காவேரி ஆற்றில் உள்ள பழுதடைந்த தூண்களை பழுது சரிசெய்யும் பணியினை சுமார் 9.60 லட்சம் செலவின மதிப்பீட்டில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– 1). அனுமதி வழங்கலாம்.
2). செலவினத்தை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.
(ந.க.எண்.1451/2019/இ1)

பொருள்– 15. குளித்தலை நகராட்சிப் பகுதியில் குடிநீர் விநியோகம் செய்யப்படும் மெயின்லைன் பழுதுகள், வால்வு பராமரிப்பு பணிகள் ஓராண்டிற்கு பழுதுகள் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளும் பணி சுமார் 6.00 லட்சம் செலவின மதிப்பீட்டில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– 1). அனுமதி வழங்கலாம்.
2). செலவினத்தை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.
(ந.க.எண்.1452/2019/இ1)

..4..

பொருள்– 16. குளித்தலை நகராட்சிப் பகுதியில் தெருவிளக்கு பராமரிப்பு பணிக்கு 2019–2020.ம் ஆண்டில் தெருவிளக்கு உபகரணங்கள் சப்ளைசெய்தல் பணிக்கு ரூ.4.75 லட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள மன்ற தீர்மானம் எண்.35, நாள்.06.03.2019.ல் அனுமதி பெற்று 25.06.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் 2 ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டதை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | பணி விபரம் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டு சதவீதம் |
|---|---|---|---|
| 1) | குளித்தலை நகராட்சிப் பகுதியில் தெருவிளக்கு பராமரிப்பு பணிக்கு 2019–2020 ஆண்டில் தெருவிளக்கு உபகரணங்கள் சப்ளைசெய்தல். | M/s.பாண்டியன் எலக்ட்ரிக்கல்ஸ், 5,திருச்சிமெயின்ரோடு, குளித்தலை. | 0.10% குறைவு |
| | | M/s.J.K.எலக்ட்ரிக்கல்ஸ், M.விஜயாகாம்ப்ளக்ஸ், பெட்டவாய்த்தலை. | 2.49% அதிகம். |

அலுவலக குறிப்பு– 1). மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் ஒப்புநோக்கு செய்யப்பட்டதில், மதிப்பிட்டிற்கு 0.10% குறைவாக ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள M/s.பாண்டியன் எலக்ட்ரிக்கல்ஸ், நிறுவன ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

2). அவசர அவசியம் கருதி ஆணையர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

(ந.க.எண்.361/2019/இ1)

பொருள்– 17. குளித்தலை நகராட்சி அனைத்து வார்டு பகுதிகளில் தானியங்கி சமுதாய குடிநீர் வழங்கும் இயந்திரம் அமைக்கப்படுகிறது. தற்போது 3 இடங்களில் அவசர அவசியம் கருதி தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15.ன்கீழ் ஆழ்குழாய் கிணறு அமைத்ததன் பட்டியல் தொகை ரூ.1,42,918/–, அம்மன் கன்ஸ்ட்ரக்ஸன்ஸ் நிறுவனத்தாருக்கு வழங்கிய விபரம் மன்றத்தின் பார்வைக்கும், பதிவுக்கும்.

அலுவலக குறிப்பு– பதிவு செய்யலாம்.

(ந.க.எண்.3114/2018/இ1)

*******

# குளித்தலை நகராட்சி

28.06.2019.ஆம் தேதிய சாதாரணக்கூட்டத் தீர்மானங்களின் உண்மைநகல்

| வ. எண். | பொருள் எண். | தீர்மானம் எண். | தீர்மான விபரம் |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1 | 1 | 111 | பதிவு செய்யப்பட்டது. |
| 2 | 2 | 112 | அனுமதி வழங்கப்பட்டது. |
| 3 | 3 | 113 | அனுமதிக்கப்பட்டது. |
| 4 | 4 | 114 | பதிவு செய்யப்பட்டது. |
| 5 | 5 | 115 | பதிவு செய்யப்பட்டது. |
| 6 | 6 | 116 | அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது. |
| 7 | 7 | 117 | பதிவு செய்யப்பட்டது. |
| 8 | 8 | 118 | அலுவலக குறிப்பு ஏற்று அனுமதித்து அங்கீகரிக்கப்பட்டது. |
| 9 | 9 | 119 | அனுமதி வழங்கப்பட்டது. |
| 10 | 10 | 120 | அனுமதி வழங்கப்பட்டது. |
| 11 | 11 | 121 | அலுவலக குறிப்பு ஏற்று அனுமதித்து அங்கீகரிக்கப்பட்டது. |
| 12 | 12 | 122 | அனுமதிக்கப்பட்டது. |
| 13 | 13 | 123 | அனுமதி வழங்கப்பட்டது. |
| 14 | 14 | 124 | அனுமதி வழங்கப்பட்டது. |
| 15 | 15 | 125 | அனுமதி வழங்கப்பட்டது. |
| 16 | 16 | 126 | அலுவலக குறிப்பு ஏற்று அனுமதித்து அங்கீகரிக்கப்பட்டது. |
| 17 | 17 | 127 | பதிவு செய்யப்பட்டது. |

ஒம்/– மு.கார்த்திகேயன்,
நகராட்சி பொறியாளர்,
ஆணையர்(பொ) மற்றும் தனி அலுவலர்(பொ),
குளித்தலை நகராட்சி.

/ உண்மை நகல் /

ஆணையர்(பொ),
குளித்தலை நகராட்சி.